திராவிடர் வாரத்தாள் | 16 பக்கங்கள் | விலை அணா 0—1—6

போர் வாள்

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons)

உள்நாடு
ஆண்டு சந்தா ரூ. 5 0 0
6-மாதம் 2 8 0

வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ. 6 8 0
6-மாதம் 3 4 0

வாள் 3

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 7
24—9—49 சனிக்கிழமை

வீச்சு 5

படவிளக்கம் 4-ம் பக்கம் பார்க்க.

ஒரு சோக சம்பவம்:

குருட்டுத் தையல்காரன்!

'இராவணன்'

கோவிந்தன் நடுத் தெருவில் நின்றான். கோவிந்தனின் தையலை மெச்சியவர்கள்—அவனின் பேச்சுத் திறமையைப் புகழ்ந்தவர்கள்-அவனின் நற்குணத்தை மேன்மைப் படுத்தியவர்கள் வேலூரிலே எத்தனை பேர்! இன்று அவன் சாப்பிடுவதற்கு உதவி செய்ய எதிர் வீட்டுக் கிழவி ஒருத்திதான் முன் வந்தாள். அவளுக்கும் தான் ஏதோ சாகுங் காலத்திலாவது தர்மம் செய்வோமே என்ற எண்ணம் போலும்!

'கிழவி போடும் சாதம்!'— இதை நினைத்தால் கோவிந்தனின் குருட்டுக் கண்ணில் நீர் வரும். 'ஆம்! அது பிச்சைச் சோறுதானே!' என்று எண்ணுவான். சோற்றின் சுவைக்காக அல்ல; தரத்திற்காக!

'கிழவியாகப்பார்த்துஒருபாத்திரத்தை எடுத்துக் கொடுத்து நான்கு வீட்டிற்கு வழி காட்டு முன் தான் எங்காவது சென்று விட வேண்டும்' என்பது கோவிந்தனின் ஆசை.

தான் நிர்க்கதியாய் விட்டுச் சென்ற கோமளம் என்னவானாள்? தன் ஒரே மகள்—சரசா, இப்பொழுதுதான் 'அப்பா!' என்று அழைக்கப் பழகிய சரசா என்னவானாள்-? என்ற சிந்தனைகள் கோவிந்தனை வாட்டின. வேலூரிலேயே தான் பிச்சையெடுத்து உண்பது என்பது மட்டும் முடியாத காரியம் என்று நினைத்த கோவிந்தன் சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்.

கண்ணுள்ள ஆத்மாக்கள், லக்கேஜ் உட்பட காசியின் பெயரைச் சொல்லியும், இராமேசுவரத்தின் பெயரைச் சொல்லியும் ரயில் வாகனத்திலேறி தேவ அனுக்கிரகம் பெறும் நாளிலே குருட்டுக் கோவிந்தன் ரயில் டிக்கட்டு எடுக்காவிட்டால் யார் கேட்கப் போகின்றனர்-? எப்படியோ கோவிந்தன் சென்னை வந்து சேர்ந்தான்.

சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள பஸ் ஸ்டாப் மழை, வெய்யில் எல்லாவற்றிற்கும் வசதியானது.

அங்கே ஆரம்பித்தான் கடையை! கைச் சரக்கு, பாட்டுதான்

யாரிடமும், 'ஐயா! கண்ணில்லாத ஆத்மா!' என்று கைநீட்டுவது கோவிந்தனுக்குக் கேவலமாகப் பட்டது. எனவே, பாட்டுப்பாட ஆரம்பித்தான். இதில் ஓரளவு அவனுக்கு நல்லவெற்றி கிடைத்தது.

இனிமையான குரல். பாடுவதெல்லாம் பாகவதர் பாட்டு. எப்படியோ அவனுக்கும் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி கிடைத்து வந்தது.

ஒரு நாள் கார் வந்து முன் நின்றது. வழக்கம் போல் கோவிந்தன் பாட ஆரம்பித்தான். அந்தக் கார் புதிய மோஸ்தரில் உள்ள பிளஷர் கார் என்பது கோவிந்தனுக்குத் தெரியாது. எப்பொழுதும் வந்து நிற்கும் சிட்டி பஸ்தானென்று அவன் கருதினான். உள்ளே இருந்து அதட்டலாக ஒரு குரல், 'ஏனப்பா! உன் பெயரென்ன—?' என்று கேட்டது.

'ஐயா! என் பெயர் கணபதி!' என்றான், கோவிந்தன்.

கோவிந்தன் சென்னைக்கு வந்து பிச்சைக்குப் புகுமுன் அவன் போட்ட திட்டம், தன் பெயரை யாரிடமும் கூறக் கூடாது என்பது தான்! எனவே 'கணபதி' என்று உரைத்தான்.

'கணபதி! உனக்கு நிறையச் சம்பளம் கொடுக்கிறோம். என்னிடம் வந்து விடுகிறாயா-?' என்று அழைத்தார்.

'எனக்குச் சம்பளம் இருக்கட்டும். சாப்பாட்டிற்கும், துணிக்கும் கொடுத்தால் போதும்!' என்று கூறினான் கணபதி. உடனே காரில் ஏற்றப்பட்டான். காரும் புறப்பட்டது.

காரில் போகும்போதே, தான் ஒரு சினிமாவில் நடிக்க வேண்டுமென்றும், குருடனாக ஒரு மரத்தடியில் இருந்து பாட வேண்டுமென்றும், அதற்காக அவனுக்குச் சம்பளம் ரூபாய் நூறு என்றும், ஒத்திகைகள் எல்லாம் முடிந்து ஷூட்டிங் ஆரம்பிக்க இன்னும் மூன்று வாரங்களாவது செல்லுமென்றும் தெரிந்து கொண்டான். அதுவரை நல்ல உணவும், உடையும், ஒத்தாசைக்கு ஒரு ஆளும் கிடைக்குமென்பதையும் கேட்டவுடன் அவனுக்கு அளவிட முடியாத ஆனந்தம்!

'அநித்திய உலகம்' என்ற படத்தில் குருட்டுப் பிச்சைக்காரனாக நடித்த கணபதிக்கு நல்ல பெயர் கிடைத்தது.

அவன் சாரீரத்தின் இனிமையையும், கெம்பீரத்தையும் சினிமா டைரக்டரும் பட முதலாளியும் அறிந்து கொண்டனர்.

(11-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் சொல்லி வைத்தது, படமுதலாளியின் கவனத்தைக் கோமளத்தின் மேல் திருப்பி விட்டது. டைரக்டர்-படமுதலாளி இவர்களின் உள் நாட்டுப் போர் கோமளத்திற்குச் சிறிது அமைதி அளித்தது. அவள் 'எக்ஸ்ட்ராவாக' நடித்த 'மன்மதன் லீலை' என்ற படப்பிடிப்பு முடிந்ததும் வேறு படங்களுக்குக் கதாநாயகி யாக்குவதாக படமுதலாளியும், நல்ல கிளைக்குக் கொண்டு வருவதாக டைரக்டரும் உறுதி அளித்துக் கொண்டே வந்தனர். இவர்கள் போராட்டத்திற்குத், தான் காரணமாக அமையக் கூடாது என்ற எண்ணம் கோமளத்தைக் கோயம்புத்தூரை விட்டுக் கிளப்பிவிட்டது. டைரக்டர்,-படமுதலாளி போட்டியில் படமுதலாளி வெற்றி பெற்று விடுவாரோ என்ற பயம் கோமளத்தைப் பிடித்தது. ஆள் அவ்வளவு வசீகரமானவன்!! எப்படியோ சென்னை வந்து சேர்ந்தாள். கோமளம் மறுபெயருடன் சென்னைப் புரசையில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டு தன் கையில் இருந்த பணத்தைச் செலவு செய்து கொண்டிருந்தாள். இன்று தங்கள் விளம்பரத்தைக் கண்டாள்- ஆனால், தாங்கள் எங்கிருக்கிறீர்கள் என்பது புலனாகாமல் தத்தளித்தாள். பிரபல நடிகர் கணபதிதான் கோவிந்தன் என்பவர் என்பது அன்று தாங்கள் 'குருட்டு உலகமே' என்ற பாட்டை ஒலிப்பதிவுக்காகப் பாடிய போது அவளுக்குத் தெரிந்தது. அன்று முதல் இன்றுவரை தங்களை எவ்வாறு சந்திப்பது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்து இன்று தைரியமாகச் சந்திக்க அவள் காத்திருக்கிறாள். அவளுக்கு இன்று அச்சம் சிறிதும் இல்லை. அவளைத் தாங்கள் நந்தா விளக்குப் பிலிம்ஸ் ஸ்டுடியோ 14 எண்ணுள்ள அறையில் வந்து பார்க்கலாம்.

இப்படிக்குத்தங்கள்
'..........'

இதைப் படித்து முடித்தான் காரியதரிசி. சரசா-தன் அருமை மகள் இறந்தாள் என்ற செய்தியைக் கேட்டதும், கணபதி, ஆ! என்றான். மேலும் விபரங்கள் தெரிய வேண்டும் என்பதற்காக பொறுமையாக இருந்தான்.

கடிதத்தை காரியதரிசி காசிநாத் முடித்ததும் 'கோமளம்! நீ என்னைப் பார்க்கவும் வந்துவிட்டாயா-? நீ என்னைப் பார்த்து ஆகவேண்டியது என்ன இருக்கிறது? தையற்காரக் கோவிந்தனாக இருந்திருந்தால் நீ என்னைப் பார்க்க வருவாயா-? என் சரசாவைக் கொன்ற சண்டாளி! நீ அச்சமில்லாமல் வந்துவிட்டாயா-? இவன் குருடன் தானே என்ற கருத்தில் வந்துவிட்டாயோ?

காசிநாத்! காசிநாத்! அவளை ஒழித்துவிடு! அவளைக்கொன்று விடு. ஓடு! 14-எண்ணுள்ள அறைக்குச் சென்று அவளை இழுத்து வா! என்று அலறினான்.

படமுதலாளி, டைரக்டர்' மற்றும் ஸ்டியோவில் உள்ள பலரும் வந்து கூடி விட்டனர்.

காசிநாத் பட முதலாளியிடம் கடிதத்தின் விபரத்தைக் கூறினான். அவரும், டைரக்டரும் 14-எண்ணுள்ள அறைக்குச்சென்றனர்.

அங்கு 'தெருப்பாடகன்' கதா நாயகி 'வனஜா கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தாள். வனஜா! வனஜா!என்றுஎழுப்பினர். அசையவில்லைவனஜா! மடியில் ஒரு கடிதங்கிடந்தது.

'தூய கணவரே

என்னைத் தீண்டிவிடாதீர்கள்! நான்பாவத்தின்உருவம்!நான் ஒரு காலத்தில் உங்கள் மனைவியாக இருந்தேன் என்றசிந்தனையைக் கூட மறந்து விடுங்கள்! நீங்கள் மாசிலாமணி. நான் துரோகத்தின் சிகரம். என் வயிற்றில் பிறந்த குழந்தையைச்சரசா என்றீர்கள்! எனக்கே அதன் தகப்பனார் யார்என்றே தெரியாது. இந்தச்சண்டாளியை அம்மாவென்று அழைக்காமலேயே அக்குழந்தை மடிந்தது நல்லது தான்; தங்கள் வாழ்க்கையில் மட்டும் நான் நடிக்கவில்லை. தங்களுடன் வனஜா என்ற பெயரால் திரைப்படத்திலும் நடித்துவிட்டேன். தங்கள் வாழ்வு என்மட்டிலும் நாடகமாகி விட்டது! இறப்பினும், எனக்கு அமைதி யிருக்க முடியாது. எனினும், இறக்கிறேன். நரகத்தையாவது விரைவில் அடைகிறேன். அது என்னை முத்தமிடும்!

இப்படிக்கு
பாபச்சிகரம்
கோமளம்."

நஞ்சுண்டு இறந்துவிட்டாள் கோமளம் என்ற செய்தியை நடிகன் கணபதியிடம் கொண்டு வந்தார் படமுதலாளி!

'மாண்டு விட்டாளா? மரணம்! அது அவளுக்கு நல்ல முடிவுதான்! ஆனால், நரகத்திலும் நாடக வாழ்க்கை நடத்துவாளோ என்று ஐயப்படுகிறேன்' என்றான் கணபதி.

கோமளத்தின் கடிதத்தைப் படித்துக் காண்பித்தனர் கணபதியிடம்.

'ஆம்! வேலூர் தையற்காரன் கோவிந்தன் தான் நான்!....... என்று ஆரம்பித்துத் தன் விபரங்களைக் கூறினான்.

'இனித் தாங்கள் என்ன

(4-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தாரோ, அதுபோலவேதான், திரண்டு குழுமியிருந்த திராவிடப் பெருங்குடி மக்களும் பொழியும் மழையைத் துளியும் பொருட்படுத்தாமல் அந்த இலட்சிய புருஷரின் பாகு மொழியினைப் பருகியபடி இருந்தனர். அடுத்த மழையிலும் விடாது கூட்டம் நடைபெற்ற காட்சி, மக்கள் மனதில் திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு விரைவில் தன் உரிமை முத்திரையைப் பொறித்து விட்டது என்பதை எழிலுற விளக்கும் ஏற்றம் நிறைந்ததாய் இருந்தது.

* * *

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரைக்கு, ஆளவந்தார்கள், இரண்டொரு நாட்களுக்குள், ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, சிறைச்சாலைக்கு வருகவென அன்பழைப்புத் தர இருக்கிறார்கள் என்று தெரிகிறது. புதுக் கழகத்தின் வளர்ச்சி தங்களுடைய ஆணவப் போக்குக்குக் கசையடி தருவது உறுதி என்பதை எண்ணி, ஆட்சியாளர்கள், கழகம் தொடங்கப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாகவே எவ்வளவு நடுங்குகிறார்கள் என்பதைத்தான் அவர்களின் இந்த விபரீதச் செயல் நன்கெடுத்துக் காட்டுகிறது. அச்சம், இருக்கத்தானே செய்யும் ஆட்சியாளர்களுக்கு! ஜனநாயகம், நேர்மை, ஓயாத உழைப்பு, தூய்மை, புரட்சித் திட்டங்கள் ஆகிய இந்த அடிப்படைகளை வைத்து அவற்றின்மீது எழுப்பப்படும் கட்டிடம் அல்லவா திராவிட முன்னேற்றக் கழகம்! எனவே ஆளவந்த நம்பிகள், தங்கள் கூடு வெளிப்பட்டுவிடுமே இனி என்றெண்ணி அஞ்சுவதிலும் திகைப்பதிலும் கைகளைப் பிசைந்து நின்று என்செய்வோம் என ஏங்குவதிலும் என்ன வியப்பிருக்கிறது?

* * *

திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாகிவிட்டது.

திராவிட மக்கட்குப் புது வாழ்வு அளிக்க கதிரவன் தோன்றிவிட்டான்.

காலை மலர்ந்துவிட்டது. புது ஒளி எங்கெங்கும் பரவத் தொடங்கிவிட்டது.

மூன்று மாத காலமாக சோர்வுற்றிருந்த இளங்காளைகள் மீண்டும் வேகவேகமாகப் பணி புரியத் தொடங்கிவிட்டனர்.

பகுத்தறிவுப் பட்டாளம் வழக்கம்போல் பழமையை ஒழிக்கும் போர் — வைதீகத்தை வீழ்த்தும் போர் — வர்ணாஸ்ரமக் கொடுமையை அழிக்கும் போர்—அறப்போர், நற்போர், வீரப்போர் புரியத் தொடங்கிவிட்டது.

வாலிபர்கள் முகத்தில் எல்லாம் ஒரு புது எழுச்சி! அவர்கள் கண்களில் எல்லாம் ஒரு புது ஒளி! அவர்கள் நடையிலேயே ஒரு புது முறுக்கு! அவர்கள் சொல்லிலே ஒரு புது ஆர்வம்! ஆம், ஆம். அவர்கள் உணர்ச்சி எனும் உணவுண்டு, உற்சாகம் எனும் உடை அணிந்து, புரட்சிப்பாதையில் பீடு நடை நடக்கத் தொடங்கிவிட்டனர்.

வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்க வாழ்கவே என்று பண் பாடத் தொடங்கிவிட்டது தமிழகம்.

வெண்ணிலாவும் வானும்போல, வீரனும் கூர்வாளும் போல, வண்ணத் தமிழும் நாமும் போல, திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிடர் உள்ளமும் வீணையும் நாதமுமாக இருந்து நாட்டு வளர்ச்சிக்கான நற்பணி புரியும் நன்னிலை ஏற்பட்டு விட்டது.

இனி, நாட்டில், திராவிட நாட்டு விடுதலைப் போர், சமுதாய ஒழிப்புப் போர், பழமையை வீழ்த்தும் போர், சமதர்ம இலட்சிய புரியை உருவாக்கும் போர் ஆகியவை வேகமாகவும், விறுவிறுப்புடனும் விரைவில் வெற்றிதரும் வகையிலும், வீரர்தம் உள்ளம் களிப்புறும் முறையிலும் நிகழும். ஆம்! அது உறுதி!

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!

வாழ்க திராவிட நாடு!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யக் கருதுகிறீர்கள்' என்று டைரக்டர் கேட்டார்.

'எனக்குக் கண் இல்லை இப்போது எனவே, இனி என்னால் நாடகத்தைப் பார்க்க முடியாது

கண்ணுள்ளபோது என்னைச் சூழ்ந்திருந்த துரோகம் இனி என்முன்னால் நிற்காது. எக்கொடுமையையும் இனி நான் பார்க்கமாட்டேன். மகிழ்ச்சி ஒன்றைமட்டும் பார்த்து உரையாடுவேன். அது பாட்டு உருவம் அடையும்'.

இன்று அவன் உள்ளத்தை முத்தமிடும் காதலி பாட்டு ஒன்றுதான்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும். "இன்பம் கொள்ளையோ கொள்ளை!"

மறு நாட்காலை. சிவராமன் தன் வேலை நிமித்தம் செல்ல வேண்டியவனானான், விமலாவிடம் விடை வேண்டினான்.

(தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

ஆங்கிலத்தை அகற்றி இந்தியைத் தென்னாட்டின் மீது திணிக்கும் ஏற்பாடு தென்னாட்டவரால் வெறுக்கப்படுகிறது என்பதை, சென்ற வாரம், அரசியல் அமைப்பு மன்றத்தில் தமிழ் நாடு காங்கிரசைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன் முதலான பலர் தெளிவாக எடுத்துக் காட்டிப் பேசியிருக்கின்றனர். அவர்களின் அந்த இந்தி எதிர்ப்பு முழக்கத்தைத்தான் பட உருவில் சித்தரித்திருக்கிறார் ஓவியர் சாமி.

சிறுகதை :

இந்த சிவராமர்கள்!

"க. பெ."

"டிக்கட் ப்ளீஸ், டிக்கட் ப்ளீஸ்" என்று கேட்ட, டிக்கட் எக்ஸாமினரைத் திடுக்கிட்டுப் பார்த்த விமலா அவசர அவசரமாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன் பர்ஸில் இருந்த டிக்கட்டைத் தேட ஆரம்பித்தாள். விமலாவின் ஒப்பற்ற அழகையும், அவளது கவலை கப்பிய வதனத்தையும் கண்ணுற்றவாறு உட்கார்ந்தார் டிக்கட் எக்ஸாமினர் சிவராமன். விமலா டிக்கட்டை எடுத்து நீட்டவே, சிவராமன் தன் நிலை பெற்றான்.

சிவராமனின் நடையும் உடையும்; சிரிப்பும், சிகரெட்டும்; இதற்கெல்லாம் மேலாக, அவனது ஸ்டைலும் விமலாவின் உள்ளத்தில் புத்துணர்ச்சியைக் கிளப்பியது. சிவராமன் இறுதியாகத் தன் கையில் இருந்த சிகரெட்டை உறிஞ்சி எரிந்துவிட்டு, டிக்கட்டில் கையெழுத்திட்டுக் கொடுத்தான்.

மேலே கண்ட நிகழ்ச்சி கடலூரில் இருந்து விழுப்புரம் செல்லும் புகை வண்டியில் இருந்த விமலாவிற்கும், டிக்கட் எக்ஸாமினர் சிவராமனுக்குமிடையே நடந்தது தான். புகை வண்டி விழுப்புரத்தை நெருங்கி விட்டது. இன்னும் இரண்டொரு ஸ்டேஷன் தான் இருக்கின்றன.

விமலா, விழுப்புரத்தில் இறங்க வேண்டியவள் என்பதை அவள் டிக்கட் மூலம் அறிந்து கொண்ட சிவராமன், இறுதியாக அவளை ஒருமுறை பார்க்க ஆவல் கொண்டவனாய் வந்தான். நல்ல வேளையாக அச்சமயம் அவள் இருந்த வண்டியிலே இரண்டொரு கிராமவாசிகளைத் தவிர வேறு யாருமில்லை. அவளது உடையும் நடையும் ஆங்கிலம் கற்ற மாது என்பதைக் காட்டவே சிவராமன் ஆங்கிலத்திலேயே அவளிடம் பேசத் தொடங்கினான். அவன் கேட்டதெல்லாம், அவள் கண்ணீரின் காரணத்தைத் தான். ஆனால் அவள் அங்கே அதைப்பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லையென்றும், தன் விஷயத்தில் அக்கறை இருந்தால், விழுப்புரம் தங்கச் செட்டித்தெரு 154 எண்ணுள்ள வீட்டில் வந்து தன்னைப் பார்க்கலாமென்றும், அங்கே வேறு யாருமில்லை என்றும் கூறினாள். இதற்குள் வண்டியும் விழுப்புரம் ஜங்ஷனில் வந்து நின்றது. விமலா தன் வழி சென்றாள் கடைசிப் புன்முறுவலுடன்! சிவராமன் தன் உத்யோக அலுவல்களையெல்லாம் முடித்துக் கொண்டான். அவனுக்கு விழுப்புரத்திலே ஒருநாள் ஓய்வு உண்டு. ஆகவே அன்றிரவு எப்படியும் விமலாவைச் சந்திப்பது என முடிவு செய்தான்.

சிவராமன் தன் இரவு உணவை முடித்துக் கொண்டு கைக் கடிகாரத்தைப் பார்த்தான், மணி ஒன்பதாயிற்று. விமலாவின் வீட்டிற்குச் செல்ல எண்ணங் கொண்டான்.

"எதற்காக அவள் நம்மை வீட்டிற்கு அழைக்கவேண்டும்? ஏதேனும் சூழ்ச்சியாய் இருக்குமோ? அது மட்டுமல்ல! அங்கே வேறு யாருமில்லை, இதை ஏன் கூறினாள்? கடைசியாகப் புன்முறுவலுடன் அவள் பார்த்த பார்வை! அடடா! ஆசையில்லாமலா அப்படிப் பார்த்தாள்!" என்று எண்ணியவாறு, ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, தங்கச் செட்டித் தெரு 154 எண் வீட்டிற்கு ஓட்டுமாறு உத்திரவிட்டான்.

சிவராமன் விமலாவைப் பற்றி என்னென்னவோ எண்ணியவாறு இருந்தான். இதற்குள் வண்டி குறிப்பிட்ட இடத்தில் வந்து நின்றது. வண்டிக்காரன் தனக்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி விட்டான்.

"விமலா! விமலா!" என்று கதவைத் தட்டினான். உள்ளிருந்த விமலா ஓடிவந்து கதவைத் திறந்தாள். தாழ்ப்பாள் திறக்கப்படும் சப்தத்தைக் கேட்டு முகத்தில் கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டான் சிவராமன். "உள்ளே வாருங்கள்," என்று விமலா புன்முறுவலோடு வரவேற்றாள். உள்ளே சென்று இருவரும் இரு நாற்காலிகளில் அமர்ந்தனர். சிவராமன் சுற்று முற்றும் பார்த்தான். அங்கே அவளைத் தவிர வேறு யாருமில்லை. கொஞ்ச நேரம் மௌனம். இறுதியாக சிவராமனே பேச்சை ஆரம்பித்தான்.

"விமலா! நான் ஏதேனும் கேட்டால் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டாயே?"

"இல்லை கூறுங்கள்"

"இராக்காலம்......தனியிடம்... ஒத்த பருவம்; எனவே நாம் காலத்தால், இடத்தால், பருவத்தால் ஒத்திருக்கிறோம் ... ... உனக்கு மட்டும்......மனம் இருந்தால்......"

விமலாவிற்கு பதில் கூற நாவெழவில்லை; என்றாலும் அவளது முகத்திலே புன்முறுவல் பூக்கிறது. சிவராமன் தாவி அவள் கையைப் பிடிக்கிறான்.

"முதலில் என் சந்தேகத்தைப் போக்குங்கள்" இது விமலாவின் துடிப்பான குரல்.

"என்ன சந்தேகம் விமலா?"

"தங்கள் பெயர்"

"மிஸ்டர் சிவராமன்."

"தாங்கள் சீர்திருத்த வாதி தானே?"

"ஆமாம்"

"பெண்களின் உரிமையை..."

"காப்பாற்றத்தான் வேண்டும்"

"மாதர் மறுமணம்......"

"மறுக்க முடியாததொன்று."

"நான் ஒரு விதவை"

"மூடச் சமூகத்தில்"

"தங்கட்டு"

"ஒரு பூங்கா!"

"நம்பிக்கைத் துரோகி......"

"நானல்ல கண்ணே!"

"ஆனால்...ச...ரி" என்று வரும் விமலாவின் பதிலையும் எதிர் பாராமல், சிவராமன் தாவி அணைத்தான் அதிகம கூறுவானேன். அன்றிரவு முழுவதும், இன்ப வெள்ளத்தில் மூழ்கி மூழ்கி எழுந்தனர் இரு

[4-ம் பக்கம் பார்க்க]

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 7
24—9—49 சனிக்கிழமை

கதிரவன் உதயம்!

கிழக்கு வெளுத்து விட்டது; பொழுது புலர்ந்து விட்டது; கார் இருள் அகன்றுவிட்டது; காணும் இடமெங்கும் புது ஒளி பரவிவிட்டது; திக்கெட்டும் புது வாழ்வு எக்களிக்கத் தொடங்கிவிட்டது! மலைகள்மீதெல்லாம் புதிய ஒளி! வயல்கள்மீதெல்லாம் புதிய இன்பம்! பூந்தோட்டங்களில் எல்லாம் புது மலர்ச்சி! வீதிகளில் எல்லாம் புதிய உற்சாகம்! வீடுகள் தோறும் புத்துணர்ச்சி! மக்கள் முகத்திலெல்லாம் புதிய எழுச்சி! இன்பம், எங்கெங்கும் தாண்டவமாடத் தொடங்கிவிட்டது! புதியதோர் ஆர்வம், ஆநந்தம், எக்காளம், எழிலின் நடனம், இயற்கையின் வனப்பு, எட்டுத் திசையெங்கும் காணப்படும் புத்தம் புதிய நிலை பிறந்துவிட்டது. காலை மலர்ந்துவிட்டது! எனவே மாந்தரெல்லாம் தங்கள் கண் மலர்ந்தே நடமாடத் தொடங்கிவிட்டனர். ஆம்! கீழ்த் திசையில், வானத்தில், புது எழுச்சி வெள்ளத்தில் மிதந்தவண்ணம், தகதகவென ஒளிவீசத் தொடங்கிவிட்டான் காலைக் கதிரவன்! வந்துவிட்டான் உலகுக்கெல்லாம் வாழ்வளிக்கும் பகலவன்! தோன்றிவிட்டான் உதய சூரியன்! எழுந்துவிட்டது, எழுந்துவிட்டது, ஞாயிறு!

ஞாயிறு எழுந்தது! எனவே, எழுந்தனர் மக்கள்! எழுந்தது தமிழகம்! எழுந்தது மறுமலர்ச்சி! எழுந்தது தமிழ் ஒளி! எழுந்தது உணர்ச்சி! ஒழிந்தது பேரிருள்! ஒழிந்தது, ஒழிந்தது, சோர்வு!

நகைமுகம் காட்டிய வண்ணம் எழுந்தோடி வந்துவிட்டான் கதிரவன்! கூடவே வந்துவிட்டது சோபிதம்! வந்துவிட்டது புது உள்ளம்! தோன்றிவிட்டது புதுப் பாதை! தொடங்கிவிட்டது புதுமையின் பூரிப்பு! பிறந்துவிட்டது, பிறந்துவிட்டது, தூய்மையின் அரசாட்சி!

இதோ, இதோ, இருட்கதவை உடைத்தெறிந்த வண்ணம் உதயமாகிறான் பரிதி! இதோ, அவனுடைய நல்லொளி! இதோ, அவனுடைய செயலின் நல்விளைவு! இதோ, இந்தப் பெருங்கடலின் அந்த ஓரத்தில் கிடுகிடுவென வானத்தின்மீது ஏறிச் செல்கிறான் பாருங்கள்! எவ்வளவு வேகம்! எத்துணை விறுவிறுப்பு!

ஆம், ஆம், இதோ, இந்த தமிழ் மக்கட் கடலிடையே இருந்து, மேலே, மேலே, எழுந்து விரைந்து புது ஒளி வீசிப் புன்னகை புரிந்திடும் இந்த ஞாயிற்றைத்தான் குறிப்பிடுகிறோம்! இந்தக் கதிரவனைப் பற்றியேதான் எழுதுகிறோம்! இந்தப் பகலவனைப் பற்றித் தீட்டப்பட்ட வாக்கியங்களேதாம் இத்தனையும்!

இதோ, கதிரவன், உங்களைப் பார்த்து புன்முறுவல் செய்கிறான்! உங்கள் கண்வழியே தன் ஒளிக்கதிர் தூதுவனை அனுப்பி, உங்கள் உள்ளத்தில் தனக்கோர் உயரிய இடம் வேண்டும் என்று கேட்கிறான்! உங்களை, வருக வருக எனக் கூவி அழைக்கிறான்! தன் பேரொளிக் கதிர்களில் மூழ்கித் திளைத்து, உங்கள் உடலை, உள்ளத்தை, உணர்ச்சியை, உற்சாகத்தை நல்வழி ஓம்புமின் என அன்புரை பகர்கிறான் என் பெயரா கேட்கிறீர்—திராவிட முன்னேற்றக் கழகம்—ஆம்! அதுதான் என் பெயர் என்று எக்காளமிடுகிறான். இன்பத் திராவிடத்தை சென்ற மூன்று மாத காலமாக கவ்விக்கொண்டிருந்த பயங்கர இருளைப் போக்க புத்தொளி வீசிய வண்ணம் பாய்ந்தோடி வந்திருக்கிறான்-உங்கள் சோகத்தைத் தீர்க்க வந்திருக்கிறான்—உங்கள் ஏக்கத்தை ஒழிக்க வந்திருக்கிறான் — உங்கள் கண்களைக் குளமாக்கிய அந்த விபரீதத் திருமணத்தின் வேதனைப் பிடியிலிருந்து உங்களை மீட்க வந்திருக்கிறான் —உங்கள் உள்ளமெனும் திரையில் இன்பம் எனும் சித்திரத்தைத் தீட்டவும், உங்கள் இயக்கம் எனும் உயிரோவியத்தின் மீது படிந்துவிட்ட 'சர்வாதிகார' மாசினைத் துடைக்கவும், உங்கள் தொண்டு எனும் பூந்தோட்டத்தில் உங்கள் தலைவர் போற்றி வளர்த்த பாசீசக் காளான்களைக் கல்லி யெறியவும்தான் ஓடோடி வந்திருக்கிறான்.—நாட்டிலே வளர்ந்துள்ள நானாவிதக் கேடுகளைக் களையவும், ஆளவந்தார்களின் பயங்கரப் பாசீசப் போக்கிலிருந்து திராவிட சமுதாயத்தை மீட்கவும், பழமையின் கோர தாண்டவம் இனியும் நாட்டில் நடைபெறாவண்ணம் அதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கவும்தான் வந்திருக்கிறான் — முதலாளித்வம் எனும் 'பாஸ்டிலி'யில் சிக்கிச் சிதையும் நம் சமுதாயத்திற்கு சமதர்மபுரியின் எழிலை

ும் இன்பத்தையும் எடுத்துக் காட்டி, நம் சமுதாயத்தை மடமடவென கைபிடித்து இழுத்துச் சென்று சமதர்மபுரியில் புதுவாழ்வு நடத்தும் நன்னிலையை உருவாக்கவும்தான் வந்திருக்கிறான் — உண்மை! பிர்லாக்களின் கைலாகுகளைப் பெற்றவண்ணம் சிரித்துப் பேசி தளுக்கி மினுக்கி இந்தியாவுக்குள் அகலக் காலூன்றிவரும் டாலர் ஏகாதிபத்தியத்தின் கொடுமையை, கோர நினைப்பை, வஞ்சகத்தை, பேராசையை புட்டுப் புட்டு விளக்கிக் காட்டி மக்களைத் தட்டி எழுப்பவும் தான் வந்திருக்கிறான்.—இன்பத் திராவிடமே, நீ எடுப்பார் கைப் பிள்ளை ஆனாயே என்ற சோக கீதத்தை உங்கட்கு நினைப் பூட்டி வடநாட்டுச் சிறையிலிருந்து நம்மைப் பெற்றெடுத்த தென்னாட்டை — இன்பப் பொன்னாட்டை விடுவிக்கும் விடுதலைப் போரினை வேகமுடன் நடத்தத்தான், நடத்தி உங்களை மகிழ்விக்கத்தான், மகிழ்வித்து உங்கள் எதிர்காலத்தை ஒரு பொற்காலமாக உருவாக்கத்தான், உருவாக்கி 'இதோ பாரீர் சமதர்மத் திருநாடு' என்று உலகுக்கெல்லாம் பூரிப்புடன் எடுத்துக் காட்டிப் பெருமிதம் அடையவுந்தான் வந்திருக்கிறான்.

வந்திருக்கிறான் — வந்துவிட்டான் — புன்னகை புரியத் தொடக்கம் செய்துவிட்டான் கதிரவன்.

அழைப்பை அளித்து விட்டான் உங்கட்கு. தோழமையை, தொண்டை, கூட்டுப் பணியை எதிர்பார்க்கிறான் உங்களிடம்.

கதிரவன் வருகிறான் என்றால் களிப்புற்று முகம் மலரும் கமலங்கள்தானே நீங்கள். எனவே கதிரவனின் அழைப்பு உங்கள் உள்ளத்தில் களிப்புத் தேனாற்றினைப் பாய்ச்சிடும் பண்பு மிகுந்தது, அருமை வாய்ந்தது, திறமை நிரம்பியது என்பதை யார் மறக்கமுடியும்?

தென்றல்—அதன் இன்பத்தை நுகர்ந்து மகிழ யாருக்குக் கசக்கும்? தேன்—இதை அள்ளி விழுங்கி உள்ளம் களிப்புற விரும்பாதார் யார் இருக்க முடியும்?

கட்டிக் கரும்பு-இதன் சுவை மிகு தன்மையை எட்டியின் கசப்பு என வெறுத்துத் தள்ள யாருக்குத்தான் மனம் வரும்?

தண்ணிலவின் வெண்ணொளி—இதில் பாய்ந்து மூழ்கி ஆநந்தங் கொண்டாட யாரே மறுப்பர்?

திராவிட முன்னேற்றக் கழகம்— இந்தக் கதிரவனின் வருகை, கண்ணொளி மழுங்கியோர் தவிர, வேறெவர்க்கு மகிழ்ச்சியைத் தாராது போகும்? இந்தத் தேனை, தினை மாவை, கட்டி வெல்லப்பாகை உண்டு மகிழ விரும்பாதார், நாக்கு என்பதன் தன்மையை இழந்தார் தவிர, வேறெவர் இருத்தல் கூடும்?

எனவேதான், **திராவிட முன்னேற்றக் கழகம்**, இவ்வளவு நம்பிக்கையுடன், இவ்வளவு பூரிப்புடன், இவ்வளவு பெருமிதத்துடன் உங்களை வருக வருக என அழைக்கிறது; நீங்களும் இதோ வந்தோம் என அதன் கொடியின் கீழ் திரண்டு குழுமத் "தயார்" கூறத் தொடங்கி விட்டீர்கள்!

இயற்கைதானே! இரும்பை காந்தம் இழுப்பதும், காந்தத்தின் கிட்டே சென்று ஒட்டிக் கொள்ள இரும்பு துடி துடிப்பதும் இயற்கைதானே! தாய், தன்னருமை மதலைகளை, "கண்ணே வா, கிளியே வா," எனறு அன்பு நனி தவழ அழைப்பதும், அந்த மதலைகள் "அம்மா வந்தோம், வந்தோம் அம்மா," என்று குழலென யாழென மழலையை முழக்கிய வண்ணம் தாயருகு சென்றணைவதும் இயற்கைதானே! தமிழனே இது கேளாய்—உன்பால் சாற்ற நினைத்தேன் பல நாளாய் என்று சங்கத் தமிழ்ச் சுவடி தமிழனை அழைப்பதும் தமிழன் அச்சுவடியின் அழைப்பை ஏற்று அந்தத் தமிழ் இன்பத்தை நுகர்ந்து நுகர்ந்து மகிழ்வதும் இயற்கை தானே!

உங்கள் உள்ளத்தில் இத்தகு பெருங்களிப்பை எழுப்பும் திராவிட முன்னேற்றக் கழகம், நீங்களும் நாடும் நன்கறிந்திருப்பது போல, "திராவிட கழகம்" என்ற அமைப்பிலிருந்து உருவானதுதான். ஆம்! திராவிட முன்னேற்றக் கழகம், மாசு நீங்கிய திராவிடர் கழகம் என்பது உண்மைதான்!

திராவிடர் கழகம் என்னும் பகுத்தறிவுப் பாசறையில் நாம் அனைவரும் பல்லாயிரக் கணக்கில் திரண்டு குழுமி, பெரியார் தலைமையில் அணிவகுத்து நின்று பல ஆண்டுகளாக ஆற்றி வந்த அரும்பணியை சென்ற மூன்றுமாத காலமாக பெரியார் திருமணம் காரணமாக நடத்த முடியாமல் போய் விட்டது.

பெரியார், அவரும் நாமும் இதுவரை செய்து வந்த பகுத்தறிவுப் பிரசாரத்திற்கும் கழகக் கொள்கைகளுக்கும் நேர் மாறான வகையில், ஒரு முப்பதாண்டம்மையைப் பொருந்தாத் திருமணம் புரிந்து கொள்ளப் போகிறார் என்ற சேதி முதன் முதல் நம் செவியில் வந்து புகுந்ததும் இடியோசை கேட்ட நாகம் போல் திடுக்கிட்டுப் போனோம்.

இந்த மணம் நடந்துவிட்டால், நாம், திராவிடர் கழகம் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு நாட்டில் நடமாட முடியாதே, இந்த மணம் நம் கழகத்தின் தூய்மைக்கே ஓர்

(10-ம் பக்கம் பார்க்க)

[10-பக்கத் தொடர்ச்சி]

படி, நாம், பெரியாரிடமிருந்து கழகத்தைக் கைப்பற்றிவிட்டாலும், அவர் அந்த முடிவுக்கு ஒத்துப்போகத் தயாராக இல்லை. இந்த நிலையில், நாம், அவரை விலக்கி விட்டால், பிறகு, நாட்டில், ஒருபுறத்தில், நாம், மிகப்பலர், திராவிடர் கழகம் நம்முடையது என்று சொல்லவும், அவரும் அவரைச் சார்ந்த மிகச் சிலரும் திராவிடர் கழகம் தங்களுடையது என்று கூறவும், நாட்டு மக்கள் அருவருப்பு அடையவுமான நிலை பிறக்கும். மேலும், அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல், நாம் இருசாராரும் இந்த 'லேபில்' சண்டையில் ஈடுபட்டிருக்கும் நேரமாகப் பார்த்து, ஏற்கெனவே நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கும் பாசிசமும், பழமையும் தலை தூக்கிநின்று நாச நர்த்தனம் புரியக்கூடும்.

எனவேதான், நாம், மிகப் பலராக இருந்தும், மிகச் சிலரிடமே கழகத்தையும் அதன் சொத்துகளையும் இருக்கவிட்டு வெளியேறி, புதிய கழகம் அமைத்துக் கொண்டுவிட்டோம்.

கண்ணியம் நம்மை இந்த முடிவு செய்யத் தூண்டிற்று. கோழைத்தனமல்ல!

பெருந்தன்மை, நம்மை இந்த முடிவுக்கருகே கொண்டுவந்து நிறுத்திற்று. அச்சம் அல்ல!

நம்மால் முடியும் — என்றாலும் நாம். திராவிடர் கழகத்தைக் கைப்பற்றவில்லை — காரணம், அதைவிட புதுக் கழகம் அமைப்பதே சிறந்த பலனைத் தரும் என்று நாம் கருதியதால்!

இந்த நம் தூய கருத்தின் விளைவுதான், **திராவிட முன்னேற்றக் கழகம்!**

* * *

17-9-49! எதை மறந்தாலும், திராவிடர்கள், இந்த நாளை மட்டும் மறக்க முடியாது. பெரியாரும் இந்த நாளை மறக்கமாட்டார். திராவிடநாட்டு வரலாறும் இந்த நாளை ஒருபோதும் மறவாது.

திராவிடர் கழகத்தின் பெயர் மீது துடைக்கப்பட முடியாத மாசு படிந்துவிட்டது என்ற காரணத்தால், கழகத்தின் மிகப் பலர் கழகத்தை விட்டு வெளியேறிய நாள்—17-9-49!

கொள்கையிலிருந்து வழுவியவர், நம் உயிருக்குயிரான உத்தமர் என்று நம்மால் போற்றிப் பாராட்டப்பட்டு வந்தவராக இருந்தாலும்கூட, அப்படி அவர் கொள்கையிலிருந்து வழுவியபிறகு, திராவிடம், ஒருபோதும் அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளாது என்ற மகத்தான உண்மையை, திராவிடம், உலகுக்கு அறிவிக்கும் நாள் 17-9-49!

சர்வாதிகாரப் பாதையில் நடப்பவர் யாராயிருந்தாலும்— அவர் நம் உள்ளத்தில் குடியேறி விட்ட உன்னதத் தலைவராக இருந்தாலும் சரி, அல்லது அரிய உழைப்புத் திறமையும் பேராற்றல் பண்புகளும் படைத்தவராயிருந்தாலும் சரியே— அவர் நமக்கு வேண்டியவர் என்ற காரணத்திற்காக அவருடைய பாசிசப் போக்கை ஏற்க தமிழகம் ஒருக்காலும் மன மிசையாது என்பதை அழுத்தந் திருத்தமாக அனைவர்க்கும் அறிவிக்கும் நாள் 17-9-49.

"பெரியார் அவர்களே! நெடுந்துயிலில் ஆழ்ந்திருந்த தமிழகத்தைத் தாங்கள் தட்டி எழுப்பினீர்கள் — அதற்காக எமது நன்றி! பல்ப்பல நூற்றாண்டுகளாக தமிழகத்தில் தழைத்திருக்கும் மூடநம்பிக்கைக் கோட்டைகளை மடமடவென முறித்துத் தள்ளினீர்கள் —அதற்காக எமது பாராட்டு! நம் சமுதாய வாழ்க்கையைச் சித்திரவதை செய்துவந்த வர்ணாஸ்ரம வெறியாட்டத்திற்குத் தக்கதோர் மரண தண்டனை கொடுத்தீர்கள் — அதற்காக எமது வணக்கம்! ஆனால் இன்று, சர்வாதிகாரப் பாதையில் முடுக்குடன் நடக்கத் தொடங்கிவிட்டீர்கள் — இதற்காக எமது கண்டனம், வெறுப்பு, ஒத்துழையாமை!" என்று, திராவிடர் இயக்கத் தோழர்கள், பெரியாரைப் பார்த்து தெளிவாகவும் திட்டமாகவும் விளக்கம் தந்த நாள் 17-9-49-

17-9-49! அன்று காலை, சென்னை பவழக்காரத் தெரு 7-ம் எண் இல்லத்தில், பெரியாரின் போக்கில் வெறுப்புற்று அவரைத் தலைவராக ஏற்க முடியாது என்று அறிவித்து விட்டவர்களும் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியில் மூன்றில் இரு பங்கினரும் ஆன கமிட்டி உறுப்பினர்கள் கூடி, நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, **திராவிட முன்னேற்றக் கழகம்** என்ற புது அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு பணியாற்றுவது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்தக் கழகத்தைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பொறுப்பு 112 பேர் கொண்ட ஒரு **பொதுக் குழு**விடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

இந்தப் பொதுக் குழு உறுப்பினர்களைக் கொண்டு பிரச்சாரக் குழு, கழக அமைப்புக் குழு, அமைப்புத்திட்டக் குழு, நிதிக் குழு ஆகிய நான்கு துணைக் குழுக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

கழகக் கொள்கைகளையும் திட்டங்களையும் திக்கெட்டும் பரப்பும் பணியினைச் சிறந்த முறையில் ஆற்றும் பொறுப்பு **பிரச்சாரக் குழு**வினைச் சேர்ந்தது. இந்தக் குழுவில் சிறந்த பல

பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

நாடெங்கும் கழகக் கிளைகளை அமைப்பது, உறுப்பினர்களைச் சேர்ப்பது, கிராமக் கழகம்—ஜில்லாக் கழகம்—தாய்க் கழகம் என்ற முறையில் அமைப்புச் சங்கிலியை ஒழுங்கு படுத்துவது முதலியன கழக **அமைப்புக் குழு**வின் பணிகள்.

கழகத்தின் சட்ட திட்டங்களை வகுப்பது, கழகத்தின் அமைப்பு முறை எவ்வண்ணம் இருத்தல் வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது முதலியன **அமைப்புத் திட்டக் குழுவின்** செயல்கள்.

கழக வேலைகட்கு நிதி சேர்ப்பதும் அதனைத் தக்க முறையில் செலவிடுவதும் **நிதிக் குழுவின்** பொறுப்புகள்.

இந்த நான்கு துணைக்குழுக்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

பொதுக் குழுவுக்கும், பொதுவாக கட்சிக்கும் பொதுச் செயலாளராக தோழர் அண்ணாதுரை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

இவை அனைத்தும் தற்காலிக ஏற்பாடுகளே. மாகாண மாநாடு கூடி, முறையான அமைப்பு ஏற்பட்டு, தேர்தல் மூலம் பல்வேறு குழுக்களும் உருவாகும் வரையிலேதான் இந்த ஏற்பாடுகள் இருக்கும்.

மாகாண மாநாட்டில் கழகக் கொடி தீர்மானிக்கப்படும் வரையில், தற்காலிகமாக, மேற்பாதி கறுப்பும் கீழ்பாதி சிகப்பும் கொண்ட கொடியே கழகக் கொடியாக இருந்து வரும்.

* * *

18-9-49 ஞாயிற்றுக் கிழமை!

அன்று மாலை சென்னை ராபின்சன் பார்க் மைதானத்தில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் மக்கட் கடல்! எந்தத் திசையில் கண்களைச் செலுத்தினாலும் திராவிடர் தம் கூட்டம்!

மாலை 3 மணி முதலே, மக்கள், அணி அணியாக கூட்டம் கூட்டமாக, கும்பல் கும்பலாக, மைதானத்தை நோக்கி வந்து குவிந்தபடி இருந்தனர். நேரம் ஆக ஆக, கூட்டத்தின் அளவு வேக வேகமாக வளர்ந்து கொண்டே வந்து, இரவு 7 மணிக்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மைதானத்தில் நிரம்பியிருந்தனர்.

“கூட்டம் பிரமாண்டமானதென்றே சொல்ல வேண்டும்.... ஏராளமான கூட்டம் திரண்டிருந்தது.”—இது, தேசிய ஏடு ‘தினசரி’யில் காணப்படும் செய்தி. மாற்றுக் கட்சி ஏடும் மனமார ஒப்புக் கொள்ளும் அளவுக்கு, கூட்டத்தின் தொகை இருந்திருக்கிறது.

மேடை மீது, ஜில்லாக்கள் தோறுமிருந்து வந்திருந்த தளபதிகள் வரிசை வரிசையாக வீற்றிருந்தனர்.

திராவிடர் கழகத்தில் யார் யார் முன்னணித் தலைவர்களாக இருந்தனரோ, யார் யார் முக்கிய பேச்சாளர்களாக இருந்தனரோ, யார் யார் கழகப் பணியில் பேரூக்கமும் பெருத்த உற்சாகமும் காட்டி வந்த தளபதிகளாக இருந்தனரோ, யார் யாருடைய அயராத தொண்டால்—பேச்சால்—எழுத்தால் திராவிடர் கழகம் மடமடவென ஓங்கி வளர்ந்ததோ, அவர்கள் அத்தனை பேரும் மேடைமீதும், மேடையைச் சுற்றிலும் அமர்ந்திருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் தொடங்கப்பட்டது என்பதை எடுத்துக் கூறி விளக்கம் தருவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டமே, இது.

கூட்டத்திற்கு கோவைத் தளபதி பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். தோழர்கள் சேலம் சித்தையன், சென்னை என். வி. நடராசன், ஈரோடு ஈ. வெ. கி. சம்பத், திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமண்யம், விருதுநகர் ஏ. வி. பி. ஆசைதம்பி, இரா. நெடுஞ்செழியன், மதுரை முத்து, குடந்தை கே. கே. நீலமேகம், பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை ஆகியோர், பெரியாரின் பொருந்தாத் திருமணத்தாலும், அதனை ஒட்டி அவர் கடந்து கொண்ட சர்வாதிகாரப் போக்கினாலும் அவருடைய தலைமையின் கீழிருந்து பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டதாலேதான் புதுக் கழகம் தொடங்கப்பட்டிருக்கிறதே தவிர மற்றபடி, திராவிடர் கழகக் கொள்கைகளிலேயும் நோக்கங்களிலேயும் நமக்கு எந்த வித மாறுபாடும் கிடையாது என்றும், பெரியார் வகுத்துக் கொடுத்த பகுத்தறிவுப் பாதையிலே நடந்து, அவர் தீட்டித் தந்த திட்டங்களை நடைமுறைக் கிதம் ஆக்கத்தான் புதுக் கழகம் பாடுபட இருக்கிறது என்றும், அரசியலில் திராவிடநாட்டுப் பிரிவினையும், சமுதாய இயலில் பேத ஒழிப்புப் போராட்டமும் பொருளாதார இயலில் சமதர்மபுரியை உருவாக்குவதும் தான். புதுக் கழகத்தின் இலட்சியங்கள் என்றும், பெரியார் நம்மை எவ்வளவு தான் தூற்றினாலும் தாக்கினாலும் கடுவிஷம் போன்ற சொற்களை எத்தனை முறைதான் நம்மீது வீசினாலும் ஏசினாலும் அவரைத் திருப்பித்தாக்கவோ ஏசவோ முன்னேற்றக் கழகம் ஒருபோதும் முனையாது என்றும், தெளிவாக விளக்கிச் சொற்பொழி வாற்றினர்.

தோழர் நீலமேகம் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த போது லேசாகத் தூற ஆரம்பித்த மழை, அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது தடதட வென்று பொழியவே தொடங்கிவிட்டது. மேடைமீது வெள்ளம்! தரையோ, குளம்! மைதானம், மழையில் குளிக்கும் நிலை பெற்று விட்டது! என்றாலும், கூட்டம், சற்றும் அசையவில்லை. சிறிதேனும் நிலை பெயரவில்லை. எப்படி, அண்ணா அவர்கள், கொட்டும் மழையில் நனைந்து கொண்டே அதைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் வீர உரை ஆற்றியபடி

(4-ம் பக்கம் பார்க்க)

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

களங்கமாக ஆகுமே என்றெண்ணி, உள்ளம் புழுங்கி இதை எப்படியேனும் தடுத்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம்.

வேண்டாம் தலைவரே இந்த விபரீதம் என்று நேரில் சென்று கெஞ்சினோம்— கேட்டாரில்லை.

கடிதங்கள் பல அனுப்பி வேண்டிக் கொண்டோம்-மனம் இசைந்தாரில்லை.

நாடெங்கும் உள்ள திராவிடர் கழகங்கள் தருமா தலைவரே இது என்று விண்ணப்பித்துக் கொண்டன-விண்ணப்பம் மதிக்கப்படவில்லை.

கழக ஆட்சிக் குழுவினர், திருமணம் இயக்க நலனுக்கு மாறானது என்பதை வலியுறுத்திக் காட்டினர்—உள்ளம் அவருக்கு இளகவில்லை.

ஐயகோ நம் தந்தையா இப்படி நடந்து கொள்கிறார், நம்மால் தலைவர் தலைவர் என்று அன்புடன் அழைக்கப்படும் அண்ணலா இப்படி நடந்து கொள்கிறார் என்பதைச் சொல்லிச் சொல்லி கண்ணீர் சிந்தினோம்-கண்ணீர், அவரால் கேலி செய்யப்பட்டது.

திருமணம் நடந்து விட்டால் பெரியாரின் தலைமையை ஏற்க முடியாது என்ற கண்டனக் கணைகளை திக்கெட்டும் உள்ள திராவிடர் கழகத் தோழர்கள் ஏவினர்—அவர் அவற்றை விஷமிகளின் பிரசாரம் எனச் சித்தரித்தார்.

கண்ணீர் சிந்தியவண்ணம் கதறி அழுத தொண்டர்களை சுயநலமிகள் என ஏசினார்; சதிகாரர்கள் என்று தூற்றினார்; உஷாராகக் கவனிக்கப்பட வேண்டிய எதிரிகள் என்று எழுத்தோவியம் தீட்டினார்.

நாம் முன்னமோர் முறை கூறியது போல, "ஆயிரமாயிரம் திராவிடர்கள் நீர்மல்கும் விழியினராய் நிற்க, ஆயிரமாயிரம் தாய்மார்கள் வேதனை வேதனை என்று சோகமுடன் கூற, ஆயிரமாயிரம்தொண்டர்கள் அந்தோ அந்தோ என அரற்ற, ஆயிரமாயிரம் மாணவர்கள் தலைவரே, தந்தையே, தருமா எனத்தேம்பி அழ," இவ்வளவுக்கு மிடையே தன் திருமணத்தை நடத்தி முடித்து விட்டார்.

இது முறையா என்று கேட்டோம் நாம். "நான் சர்வாதிகாரி இக் கழகத்தில். நான் வைத்ததுதான் சட்டம்" என்று பேசினார்.

இது அடுக்குமா என்று புகன்றோம் நாம். 'சொந்த புத்தி உள்ளவர்கள் இங்கிருக்கத் தேவையில்லை' என்று பாசிச அந்தாதி வாசிக்கலானார் அவர்.

கழகக் கொள்கைக்கு மாறுகப் பொருந்தா மணம் புரிந்து கொண்ட கொடுமையோடு நில்லாமல், பாசிசப் பாதையில் கழகத்தை நடத்திச் செல்லவும் அவர் தயாராக இருப்பது கண்டு, இத்தகு தலைவர்மீது நம்பிக்கையில்லை—எனவே இவர் தலைமைப் பதவியைவிட்டு விலக வேண்டும் என்று திராவிடர் கழகத் தோழர்களில் மிகப் பலர் தெளிவாகக் கூறிவிட்டனர்.

நிர்வாகக் கமிட்டியினரில் மூன்றில் இரு பங்கினர், இவர் தலைமையில் வேலை செய்ய முடியாது என்று கூறிவிட்டனர்.

கழகக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பும் நற்பணி புரிந்துவந்த கழகப் பேச்சாளர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரில் இரண்டொருவர் தவிர ஏனையோர் அனைவரும் பெரியாருடன் ஒத்துழைக்க மறுத்து விட்டனர்

கழகத்தில், மிகப் பலர், தன் தலைமையை விரும்பவில்லை என்பது தெரிந்ததும், ஜனநாய தத்துவத்தில் நம்பிக்கையு கண்ணியமாக நடந்து கொளும் மனப் பண்பும் உள்ள ஒ தலைவர் செய்யவேண்டிய முத பணி தலைமைப் பீடத்தை காலி செய்துவிட்டு வேறு த வரைத் தேர்ந்தெடுத்து கொள்ள, கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் வசதியு செய்து தருவதுதான். இதான் நியாயம். இதுதான்முறை இதுதான் ஜனநாயகப் பாதை.

ஆனால், பெரியார், இந்தப் பாதைவழி செல்லவில்லை.

தலைமைப் பீடத்தைக் கா செய்ய அவர் முன்வரவில்லை.

மிகப் பலர், அவருடன் ஒ துழைக்க மறுத்து விட்டதால், கழகப் பணியும் ஸ்தம்பித்து விட்டது.

இந்த நிலையில், கழகம் ஆற் வந்த பகுத்தறிவுப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதில் அக்கறையுடை அந்த 'மிகப் பலர்', கண்ணியமான முறையில் அவராக தலைமைப் பதவியை விட்டு விலகாத காரணத்தால், ஜனநாயக முறைப்படி அவரை விலக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

இதை அவர்களால்—அதாவது நம்மால், எளிதில் செய் திருக்கமுடியும்.

பெரியாருடன் ஒத்துழைக்க மறுத்தவர்களே, கட்சியிலும் சரி, கட்சி நிர்வாகக் கமிட்டியிலும் சரி, மிகப் பலர்.

எனவே, நம்மால், தலைமைப் பீடத்தை மாற்றியிருக்க முடியும். நிச்சயமாக முடியும்.

என்றாலும் நாம் இதைச் செய்யவில்லை.

ஏனெனில், ஜனநாயக முறை

[8-ம்-பக்கம் பார்க்க]

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelian B. A. (Hons)

(2- பக்கத் தொடர்ச்சி)

அடுத்த படியாகக் கணபதியே கதா நாயகனாக நடிக்கும்படி ஒரு கதை அமைக்கப் பட்டது. 'நான் குருடன்' என்பது அக் கதையின் பெயர். இப் பொழுது கணபதிக்குச் சம்பளம் ரூபாய் 5000 ஆம்! ஐபா பிரம்!

கதையின் முற்பகுதியில், கதா நாயகன் நல்ல அழகுடையவனாகவும், கண்ணுள்ளவனாகவும் தோன்றும் 'மேக் அப்' செய்யப் பட்டது. கதையின் பிற் பகுதியில் கதா நாயகன் குருடனாக வேண்டிய நிலையும், மனைவி மக்களைப் பிரிந்து கஷ்டப் படவும், முடிவில் மனைவி மக்களை அடையும் நிலையுமாகக் கதை தயாரிக்கப் பட்டது.

தமிழ் நாட்டில் இப் படத்திற்கு நல்ல ஆதரவும், கணபதியின் பாட்டிற்கும், நடிப்பிற்கும் நல்ல புகழும் கிடைத்தது. கணபதியின் வாழ்க்கையையே அவன் நடித்தான் என்பதை யாரும் அறியார். அத்துடன் கதா நாயகியாக அப் படத்தில் தோன்றிய பெண்ணும் புதிய முகம். மிகவும் அழகு பொருந்தியவள். எனவே, படப் பிடிப்புக் கம்பெனிக்கும் நல்ல பணம் கிடைத்தது. அவர்கள் போட்ட முதலோ மிகக் குறைவு.

பத்திரிகைகளிலோ பாராட்டுரைகள்:

"திரைக்கு மறைவில் இருந்து வரும் புதிய முகங்களையும், நல்ல பாடகர்களையும், நடிகர்களையும் இழுத்து வந்து படத் திரையில் விட்டு சினிமாக் கலைக்கும் துரோகம் செய்யாமல் நாட்டு மக்களுக்கும் நல்ல விருந்து அளித்துள்ள 'நந்தா விளக்குபிக்சர்சா'ரை மற்ற புரொடக்ஷன்களும் பின் பற்றுமா?" என்ற வினாக்களைப் பலப் பல விதமாகக் கேட்டு, அத்தனை பத்திரிகைகளும் தங்கள்விமர்சனத்தை முடித்தன.

ரசிகர் குழாங்களோ,

'கணபதி என்பவர் யார்? அவருக்கு மனைவி மக்களுண்டா?" என்ற வினாக்களை எழுப்பிப் பத்திராசிரியர்களுக்கு வேலை கொடுத்தன.

நந்தா விளக்கு பிக்சர்ஸ் முதலாளி நாராயணசாமி ரெட்டியாரோ கணபதியை வைத்து இரவல் குரல் படத் தயாரிப்புகளுக்கெல்லாம் திட்டமிட்டார்.

மேலும், 'நான் குருடன்' படத்திற்குக் கிடைத்த கதா நாயகிக்கு முக வெட்டும், நடிப்புத் திறமையும் இருப்பதுடன், மூன்றாண்டுக் குத்தகையும் இருப்பதால் அவளையே கதா நாயகியாக வைத்து முடிந்த மட்டும் அதிகப் படங்களை எடுத்து விடத் தீர்மானித்தார்.

கணபதிக்குத் தனிப் பங்களாவும், ஏவலாளரும் அமோகமாக இருந்தன. கணபதி ஒரு நாள் தன் முதலாளியை அழைத்து வரும்படி ஒரு ஆளிடம் சொல்லி அனுப்பினான். அவரும் வந்து சேர்ந்தார். வந்ததும் அவரிடம் "தாங்கள் எனக்காக ஒரு விளம்பரஞ் செய்ய வேண்டும். ஏன்-? எதற்கு-? என்ற கேள்விகளைக் கேட்கக் கூடாது. உங்கள் பெயராலும் இல்லாமல் என் பெயராலும் இல்லாமல் விளம்பரத்தைப் போட்டு விடுங்கள்" என்று கூறிக் கொடுத்தான்.

அவ் விளம்பரம்:

"வேலூரில் இருந்து வந்த டைலர் கோவிந்தனின்மனைவி கோமளம்என்பவரும், அவர் மகள் சரசாவும் இருக்குமிடந் தெரிந்து கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதினாலும் அல்லது அவர்களை அழைத்து வந்தாலும் ரூபாய் 500 இனாம்.

நாராயணசாமி ரெட்டியார், 294, கீழ்ப்பாக்கம் ஹைரோடு, சென்னை"

விளம்பரம் மறுநாளே சென்னைப் பத்திரிகைகளில் பலவற்றில் வெளியாகி யிருந்தன.

அன்று நந்தா விளக்கு பிக்சர் கம்பெனியின் முதலாளி நாராயணசாமி ரெட்டியாருக்கு "தங்கள் பெயரால் இன்று வந்திருக்கும் விளம்பரம் பார்த்தேன். அதன் விபரம் என்ன-?" என்ற கேள்வி டெலிபோனில் அடிக்கடி வந்து கொண்டே இருந்தது. அவரின் நண்பர்கள் பலர் அவரைத் தொந்தரவு செய்தனர். அவர் சில வேண்டிய நண்பர்களிடம் மட்டும் "இது நடிகர் கணபதி சம்பந்தப்பட்டது" என்று பதிலளித்தார்.

நந்தா விளக்குக் கம்பெனியார் 'தெருப் பாடகன்' என்ற படத்தைப் பிடிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். தெருப்பாடகனாக நடிப்பவருக்கு குரல் கொடுக்க வேண்டியது கணபதியின் பொறுப்பு. அப்படத்தில் கணபதி பாட வேண்டிய பாட்டு மொத்தம் எட்டு. ஒரு பாட்டில், பாடகன் தெருவில் பாடிக் கொண்டு போகும் போது செருக்குடைய ஒருவன் தன் நண்பனிடம் 'குருட்டு உலகம்' என்ற வார்த்தையை உபயோகிக்கிறான். அதைச் செவியுற்ற பாடகன் 'குருட்டு உலகமே! இது அழிவது நிசமே' என்ற தலைப்புடன் பாடவேண்டும். இந்தப் பாடலைப் பாடும் போது கணபதியின் குருட்டுக்கண்ணில் நீர்வடிந்தது.

நாளை நடக்க விருப்பதை அறியாத நீ குருடன்தானே! என்ற கருத்துப்படக் கணபதி பாடும்பொழுது அலறிவிட்டான். ஒலிப்பதிவில் இப்பாட்டு நன்றாக எடுக்கப்பட்டு விட்டது. நடிகர்கள், படமுதலாளி, டைரக்டர் அனைவரும் கணபதியைப் பாராட்டினர்.

கணபதிக்கு நாள் தவறாமல் பல கடிதங்கள் வரும். சினிமா நடிகர்களுக்குக் கடிதங்கள் வருவதற்குக் கேட்கவா வேண்டும்!

பலகடிதங்கள் கணபதியின் சொந்தப் பார்வைக்காக வரும். பாவம்! அவர்களின் நினைப்பு, கணபதியே எல்லாவற்றையும் படிக்கிறான் என்பதே!

கணபதிக்கு வரும் கடிதங்களைப் படிப்பதற்கு ஒரு காரியதரிசி நியமிக்கப்பட்டிருந்தான். அவன் நிலை மிகச்சங்கடமானது. பல காதல் கடிதங்களை அவன் படிக்க நேரிடும். காதல் கடிதங்களையெல்லாம் கேட்டுச் சிரிப்பதைத் தவிர கணபதி வேறு ஒன்றும் செய்ய மாட்டான். கணபதியைக் குருடன் என்று தெரிந்தும் அவனைக்காதலித்தனர்.

ஒரு நாள் வந்த கடிதங்களிலே மிகக் கனமான கடிதம் ஒன்று இருந்தது: அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான் காரியதரிசி:

“கள்ளங் கபடமற்ற சத்புருஷர்.. ....அவர்களுக்கு எழுதிக் கொண்ட நிருபம்: நீங்கள் ஆவலாய்த் தேடும் கோமளம், சரசா—இவர்களின் வரலாற்றைக் கூறுகிறேன்.

கோமளாவை நீங்கள் திருமணஞ் செய்து கொண்டதுமுதல் உங்கள் மீது அவள் மாசு மறுவற்ற அன்புடன் இருக்கிறாள் என்று நம்பினீர்கள். அவளை இளம் பிராயமுதலே நேசித்து வந்த சாமண்ணா என்பவனுடன் கள்ளக் காதல் நடத்திக் கொண்டே தங்களிடம் பிரியமாய் இருப்பது போலவே நடந்து வந்தாள். அவளுக்கு இன்று வரை தெரியாது, சரசாவிற்கு யார் தந்தை என்பது.

நீங்கள் வைசூரி கண்டு பஞ்சாயத்துப் போர்டாரால் அப்புறப் படுத்தப்பட்ட மூன்று நாட்களிலெல்லாம் சாமண்ணாவே தங்கள் வீட்டில் தங்கிவர ஆரம்பித்தான். தாங்கள் பிழைக்க மாட்டீர்கள் என்றே அவர்கள் இருவரும் கருதினர். ஆனால், நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள் என்று தெரிந்ததும் இருவருமாக வேறு எங்காவது வெளியேறிவிட வேண்டுமெனத் திட்டமிட்டுக் கிளம்பிக் கோயம்புத்தூர் சென்றனர்.

கோயம்புத்தூர் சென்றதும் குழந்தை சரசாவிற்கு ஜுரம் கண்டது. குழந்தை இருப்பது சாமண்ணாவிற்குப் பிடிக்கவில்லை. அவன் வாங்கி வந்த மருந்து குழந்தையை உடனே கொன்று விட்டது. கோமளம் துயர் தாங்காது துடித்தாள். சாமண்ணா உள்ளூரச் சிரித்தான். பிழைப்பதற்கு வழிதேடுவதற்குப் பாட்டாசிரியர்தொழிலை மேற்கொண்டான். ஒரு அளவு வருவாய் வந்தது. வருவாய் வந்து வாழ்ந்ததெல்லாம் ஒருமாதம்தான். கிடைக்கும் பணத்தை எல்லாம் சூதாட்டத்தில் செலவு செய்து வந்தான் என்பது பிறகுதான் தெரிந்தது. தாங்கொணாதை வறுமை! எப்படியாவது வயிறு வளர்த்தால் போதும் என்ற நிலை வந்தது. இச்சந்தர்ப்பத்தில் சினிமா எக்ஸ்ட்ரா வேலை ஒன்றைச் சம்பாதித்துக் கொண்டு என்னைக் கோயம்புத்தூர் ராகவா ஸ்டுடியோவிற்கு அழைத்துச் சென்றான்.

ஸ்டுடியோ என்பது என்ன என்றே தெரியாது இருந்த கோமளம் ஸ்டுடியோவிற்குச் சென்றதும் அவளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. வரவேற்றவர்கள் அனைவரும் ஆண்களே. நடிகைகளின் பெருமைப் பார்வையும் அவளை வரவேற்றது. மறுநாள்,தான் ஸ்டுடியோவிற்கு செல்ல முடியாதென மறுத்தாள் கோமளம். முதல் நாள் அனுபவமே கடுமையானதாகிவிட்டது அவளுக்கு.

‘ஏன் போக மறுக்கிறாய்?

‘அங்கு தேவடியாள்தான் போவாள்!’

‘நீ யார்—?’

இது கோமளத்திற்கும், சாமண்ணாவிற்கும் நடந்த உரையாடல்.

இவ்வுரையாடல் நடந்து கொண்டிருக்கும போதே ஒரு கார் அவர்கள் வீட்டின் முன் வந்து நின்றது. ஸ்டுடியோவில் அவள் கண்ட டைரக்டர் காரிலிருந்து இறங்கி ‘மிஸ்டர் சாமண்ணா!’ என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தார்.

‘வாருங்கள்! வாருங்கள்!’ என்று வரவேற்று வாயைப் பிளந்தான் சாமண்ணா. ‘இதோ! இருங்கள்! காப்பி வாங்கி வருகிறேன்’ என்று ஓடினான். அரை மணி நேரம்—போனவனே!

இதற்குள் டைரக்டர்கோமளத்தைப் ......பிறகு சாமண்ணா சேர்ந்தான்.

டைரக்டர் ஜெயங்கராவ் வெற்றிச் சிரிப்புடன் சாமண்ணாவை வரவேற்றார். அதற்குப் பின் கோமளம் ஸ்டுடியோ செல்வதற்கு அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால், ஸ்டுடியோவிலேயே கோமளத்திற்குத் தனிப் பங்களா ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. கோமளத்தின் வாழ்க்கை இன்பத்தேரில் ஓடி வந்தது. ஆனால், சாமண்ணா சனியன் உருவாகக் காட்சி யளித்தான். குழந்தை சரசாவைக் கொன்ற பாதகன் என்ற வஞ்சத்தை டைரக்டர் ஜெயங்கராவைக் கொண்டு அவள் தீர்த்துக் கொண்டாள். ஸ்டுடியோவில் நடந்த 5000 ரூபாய் திருட்டு சம்பந்தமாக சாமண்ணா மூன்று வருட தண்டனை விதிக்கப்பட்டான். கோமளத்தின் நடிப்பு உயர்ந்தது என்ற பாராட்டைப் பட முதலாளியிடம் டைர

(3-ம் பக்கம் பார்க்க)